**மார்ச் – 12**

# TNPSC துளிகள்

- இருக்கை அளவு அடிப்படையில் உலகின் இரண்டாவது வேகமாக வளர்ந்து வரும் ஒரு விமான நிறுவனமாகவும், விமான இயக்க எண்ணிக்கையில் வேகமாக வளர்ந்து வரும் விமான நிறுவனமாகவும் இண்டிகோ நிறுவனம் உருவெடுத்துள்ளது.
- அமெரிக்கக் கடற்படையின் 7வது கடற்படையால் நடத்தப்படும் மேற்கு பசிபிக் பெருங் கடலில் குவாம் நாட்டின் கடற்கரையில் சீ டிராகன் 2025 என்ற கடற்படைப் பயிற்சியில் இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் தென் கொரியக் குடியரசு ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன.
- இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) ஆனது, வலுவான காப்பீட்டு நிறுவனமாகவும் 9.8 பில்லியன் டாலர்கள் மதிப்புடன் 12வது நிலையான நிறுவனமாகவும் உருவெடுத்து உள்ளது.
- அசாம் மாநில அரசு ஆனது, இந்தியாவின் தொழில்துறை மற்றும் தொழில்நுட்பங்கள் மேம்பாட்டிற்கு ரத்தன் டாடா அவர்கள் அளித்த ஒரு பங்களிப்பைப் பாராட்டி அவரது பெயரை அம்மாநில மின்னணு நகரத்திற்கு சூட்ட முடிவு செய்துள்ளது.
- இந்தியாவின் புலிகள் மாநிலமான மத்தியப் பிரதேசத்தின் மாதவ் தேசியப் பூங்கா என்பது, இந்தியாவின் 58வது புலிகள் வளங்காப்பகமாகவும் அந்த மாநிலத்தின் 9வது புலிகள் வளங்காப்பகமாகவும் அதிகாரப் பூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளது.
- பாரத் ஸ்டேட் வங்கி (SBI) ஆனது, பெண் தொழில்முனைவோருக்காக பிரத்தியேகமாக பிணை எதுவும் சமர்ப்பிப்பு இல்லாத 'SBI அஸ்மிதா' எனப்படும் எண்ணிம SME கடனை அறிமுகப் படுத்தியுள்ளது.
- கனடாவின் தாராளவாதக் கட்சியின் புதியத் தலைவராகவும், ஜஸ்டின் ட்ரூடோவுக்குப் பதிலாக நாட்டின் அடுத்தப் பிரதமராகவும் மார்க் கார்னி என்பவர் நியமிக்கப் பட்டு உள்ளார்.

# தேசியச் செய்திகள்

## A Million Women Arise முன்னெடுப்பு




- நிதி ஆயோக் மற்றும் இந்திய சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SME) மன்றம் ஆனது, இந்தியா முழுவதும் உள்ள பெண் தொழில்முனைவோருக்கு நன்கு அதிகாரம்

அளிப்பதற்காக "A Million Women Arise" என்ற கூட்டு முன்னெடுப்பினைத் தொடங்கி உள்ளன.

- நிதி, சந்தைகள், இணக்க ஆதரவு, திறன் மேம்பாடு, வழிகாட்டுதல் மற்றும் வலை ஆக்கம் ஆகியவற்றை அணுகுவதன் மூலம் ஒரு ஒருங்கிணைந்த ஆதரவு அமைப்பை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.
- இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட ஆறு கோடி குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களில் 35% பெண்களுக்குச் சொந்தமான நிறுவனங்களாகும்.

## T-72 பீரங்கி எந்திரங்களுக்கான ஒப்பந்தம்




- பாதுகாப்பு அமைச்சகம் ஆனது T-72 ரக பீரங்கி எந்திரங்களை வாங்குவதற்காக என்று ரஷ்யாவின் ரோசோபோரோனெக்ஸ்போர்ட்டு என்ற நிறுவனத்துடன் 248 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தத்தில், ஆவடியில் உள்ள ஆயுதத்துடன் கூடிய வாகன உற்பத்தித் தொழிற் சாலைக்கான தொழில்நுட்ப (ToT) பரிமாற்றச் செயல்முறையும் அடங்கும்.
- இந்திய இராணுவத்தில் அஜயா என்று பெயரிடப்பட்ட T-72 பீரங்கியானது, 1970 ஆம் ஆண்டில் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- தற்போது இதில் 780 HP எந்திரம் பொருத்தப்பட்டுள்ளது.

## மாற்றியமைக்கப்பட்ட எத்தனால் தயாரிப்பு வட்டி மானியத் திட்டம்

- மத்திய உணவு அமைச்சகம் ஆனது, மாற்றியமைக்கப்பட்ட எத்தனால் தயாரிப்பு வட்டி மானியத் திட்டத்தினை அறிவித்துள்ளது.
- இது ஓராண்டு கால அவகாசம் உட்பட ஐந்து ஆண்டுகளுக்கு, ஆண்டிற்கு 6 சதவீதம் அல்லது வங்கி வட்டி விகிதங்களில் 50 சதவீதம் இவற்றில் எது குறைவாக இருக்கிறதோ அந்த வட்டி மானியங்களை வழங்கும்.
- இந்த நடவடிக்கையானது, அரசாங்கத்தின் பெட்ரோல் எத்தனால் கலப்பு (EBP) என்ற


திட்டத்தினை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஆண்டு முழுவதும் செயல்படுவதை மிக நன்கு உறுதி செய்வதற்காக என்று, அவற்றின் தற்போதைய எத்தனால் ஆலைகளை புதிய மாற்றி அமைக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் மக்காச்சோளம் மற்றும் DFG போன்ற சில தானியங்களைப் பயன்படுத்த வேண்டி பல் ஊட்டப் பொருட்கள் அடிப்படையிலான ஆலைகளாக மாற்ற இயலும்.




## சர்வதேசச் செய்திகள்

### தெற்கு ஜார்ஜியா தீவில் A23a




- உலகின் மிகப்பெரியப் பனிப்பாறையானது தொலைதூரப் பிரிட்டிஷ் தீவான தெற்கு ஜார்ஜியா கடற்கரையிலிருந்து சற்று தொலைவில் ஆழமற்ற ஒரு கடல் பகுதியில் கரை ஒதுங்கியுள்ளது.
- இந்தப் பனிப் பாறையானது, கிரேட்டர் இலண்டன் அளவினை விட இரண்டு மடங்கு


பெரியதாகும்.

- இது 1986 ஆம் ஆண்டில் அண்டார்டிகாவின் ஃபில்ச்னர் என்ற பனிப் படலத்தில் இருந்து பிரிந்து சென்றது.
- இது 30 ஆண்டுகளுக்கும் மேலாக வெட்டல் பெருங்கடலில் சிக்கியிருந்தது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்திய நிதி அமைப்பின் நிலைத்தன்மை குறித்த மதிப்பீடு 2025

- “இந்திய நிதி அமைப்பின் நிலைத் தன்மை மதிப்பீடு” என்ற தலைப்பிலான இந்த ஒரு அறிக்கையானது சர்வதேச நாணய நிதியத்தால் வெளியிடப் பட்டுள்ளது.
- மின்சாரத் துறை கடன்களில் சுமார் 63% ஆனது, 2024 ஆம் நிதியாண்டில் ஒரு வகை NBFC நிறுவனங்களாக இருந்த மூன்று பெரிய உள்கட்டமைப்பு நிதி நிறுவனங்களில் இருந்து மட்டுமே பெறப்பட்டவை என்று கண்டறியப்பட்டுள்ளது.
- இது 2019-20 ஆம் ஆண்டில் 55% ஆக இருந்தது.
- மேலும், அவற்றின் கடன்களில் சுமார் 56% ஆனது, சந்தை சார் செயற்கருவிகள் மூலம் நிதியளிக்கப் பட்டது என்ற நிலையில் மீதமுள்ளவை மட்டுமே வங்கி கடன்கள் மூலம் நிதியளிக்கப் பட்டு ள்ளன.
- பொதுத்துறை வங்கிகள் (PSB) சுமார் 9% மட்டுமே மூலதன நிறைவு விகிதத்தை (CAR) பேணுவதில் சிரமங்களை சந்திக்க நேரிடுகின்றது.
- CAR என்பது இடர் உண்டாகும் சொத்துகள் மீதான மூலதன விகிதமாகும் என்பதோடு இது வங்கியின் இழப்பு ஏற்புத் திறனை அளவிட பயன்படுகிறது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, PSB மற்றும் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளுக்கு என முறையே 12% மற்றும் 9% CAR விகிதத்தினைக் கட்டாயமாக்குகிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## BM-04 SRBM

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, BM-04 எனப்படும் நாட்டின்


சமீபத்திய மிக குறுகிய தூர தாக்குதல் வரம்புடைய எறிகணையின் மாதிரி மற்றும் விவரங்களை வெளியிட்டுள்ளது.

- BM-04 என்பது அதி மீயொலி வேகத்தில் (மாக் 5 மற்றும் அதற்கும் மேலான ஒரு வேகம்) பறக்கக் கூடியது.
- எதிரி நாட்டு ஆயுதங்களின் அணுகல் தடுப்பு / பகுதி மறுப்பு (A2/AD) திறன்களை நடு நிலையாக்க இந்த எறிகணைகள் பயன்படுத்தப்படும்.
- ரஷ்யா, அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய மூன்று நாடுகள் மட்டுமே தங்கள் ஆயுதக் தொகுப்பில் அதி மீயொலி எறிகணைகளைக் கொண்டுள்ளன.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஒருங்கிணைந்த ஈரநில வாழ் பறவைகள் கணக்கெடுப்பு 2025 – தமிழ்நாடு





- 2025 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஈரநில வாழ் பறவைகள் கணக்கெடுப்பின் போது பல்வேறு ஈரநில வாழ் பறவை இனங்கள் காணப்பட்டு பதிவு செய்யப்பட்டன.
- திருச்சி மாவட்டத்தில் நடத்தப்பட்ட இந்தக் கணக்கெடுப்பு 20 ஈரநிலப் பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

- வலசை போகும் பறவைகளைக் கண்காணித்தல், ஏரிகள், குளங்கள் மற்றும் இதர பிற நீர்நிலைகளில் பறவை வாழ்விடங்களை மதிப்பிடுதல் மற்றும் ஈரநிலப் பறவைகளின் பயனுள்ள மேலாண்மை மற்றும் வளங்காப்பினை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்தக் கணக்கெடுப்பானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- புதுக்கோட்டை மாவட்டத்தில், கவிநாடு குளம், ஆரியூர் குளம், அன்னவாசல் 'பெரிய குளம்' மற்றும் சிறுங்காகுளம் உள்ளிட்ட 25 ஈரநிலங்களில் இந்தக் கணக்கெடுப்பு மேற் கொள்ளப் பட்டது.
- அரியலூர் மாவட்டத்தில் கரைவெட்டி பறவைகள் சரணாலயத்தை உள்ளடக்கிய 10 சதுப்பு நிலங்களில் இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.
- பெரம்பலூர் மாவட்டத்தில் சுமார் 20 சதுப்பு நிலங்களில் இந்தக் கணக்கெடுப்பு மேற் கொள்ளப் பட்டது.

## உலகின் வலுவான பெருங்கடல் நீரோட்டம்

- அண்டார்டிக் பனிப்படலம் ஆனது, கட்டுப்படுத்த இயலாத ஒரு அளவிற்கு உருகுவதால் உலகின் வலுவான பெருங்கடல் நீரோட்டம் குறைந்து வருகிறது.
- மேற்கிலிருந்து கிழக்கே அண்டார்டிகா முழுவதும் பாயும் இந்த அண்டார்டிக் ஆழ்கடல் நீரோட்டம் (ACC) என்பது, உலகளாவியப் பருவநிலை மற்றும் பெருங்கடல் சுழற்சியை ஒழுங்குபடுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- இங்கு பனி உருகுவதன் விளைவாக, தெற்குப் பெருங்கடலில் அதிக அளவு நன்னீர் பாய்வதால், அதன் உப்புத்தன்மை மற்றும் அடர்த்தி மாறுகிறது.
- இந்த மாற்றங்கள் ஆனது, ACC உட்பட பெருங்கடல் நீரோட்டங்களின் இயக்கத்தைப் பாதிக்கின்றன.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## பணியாளர் வளத்தில் பெண்களின் பங்கு மற்றும் தாக்கக் குறியீடு 2025

- கடந்த இரண்டு ஆண்டுகளாக உழைக்கும் பெண்களுக்கு சிறந்த ஒரு நாடாக திகழ்ந்த

ஐஸ்லாந்து நாட்டினை விஞ்சி, சுவீடன் நாடானது 2025 ஆம் ஆண்டிற்கான குறியீட்டில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

- OECD அமைப்பு நாடுகளில், பெண்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தில் மிகவும் ஒரு சராசரியாக 34% அதிகரிப்பு என்பது பதிவானது.
- ஜப்பான் மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளில் பிரதிநிதித்துவம் ஆனது முறையே 16% (10 சதவீதத்திலிருந்து) மற்றும் 41% (35 சதவீதத்திலிருந்து) ஆக குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிப்பு பதிவாகியுள்ளன.
- இதற்கு நேர்மாறாக, பிரதிநிதித்துவம் 28.7% ஆகக் குறைந்துள்ளதுடன், அமெரிக்காவில் ஒரு சிறிய சரிவு என்பது பதிவானது.
- சுவீடனில் பெண்களின் சராசரி மாதச் சம்பளம் ஆண்களின் சராசரி மாத சம்பளத்தில் 90% ஆகும்.
- பாலினம் சார்ந்த மகப்பேறு விடுப்பைப் பாலின நடுநிலை சார்ந்த விடுப்பாக மாற்றிய முதல் நாடும் சுவீடன் ஆகும்.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### தமிழ்நாடு அறிவியலாளர் சுவாதி சுதாகர்


- பிரிக்ஸ் அமைப்பின் கூட்டத்தில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, விண்வெளி சார் சிகிச்சையில் தனது ஆராய்ச்சி பற்றி உரையாற்றுவதற்காக என்று கடந்த ஆண்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் இந்த இளம் அறிவியலாளர் பரிந்துரை செய்து வைக்கப் பட்டார்.
- தென் கொரிய நாட்டின் யோன்செய் பல்கலைக்கழகத்தினால் சுவாதிக்கு சமீபத்தில் கௌரவ குறுகிய கால/வருகை புத்தாய்வு மாணாக்கர் அந்தஸ்து வழங்கப்பட்டது.

- அவரது குழுவானது, எலும்புப் புரை நோயைத் தடுப்பதற்கு என நுண் பொருள் சார்ந்த சிகிச்சைகளை உருவாக்கி வருகிறது.
- விண்வெளியில் நுண் ஈர்ப்பு விசை நிலையில் பணி புரிகின்ற விண்வெளி வீரர்கள் எலும்புப் புரை நோயால் பாதிக்கப்படுகிறார்கள்.




## விளையாட்டுச் செய்திகள்

### 2025 ஆம் ஆண்டு IPL போட்டிகளில் இருந்து ஹாரி புரூக் விலகல்





- இங்கிலாந்து பேட்ஸ்மேன் ஹாரி புரூக் தொடர்ந்து இரண்டாவது முறையாக, இந்தியன் பிரீமியர் லீக் (IPL) போட்டிகளில் (2025) இருந்து விலகியுள்ளார்.

- இந்த மாத இறுதியில் தொடங்க உள்ள புதிய IPL போட்டித் தொடருக்காக அவர் டெல்லி கேபிடல்ஸ் அணியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டார்.
- ஏலத்தில் பதிவு செய்து, ஏலத்தில் தேர்வு செய்யப்பட்ட பிறகு, அந்தப் போட்டித் தொடர் தொடங்குவதற்கு முன்னதாக அந்தப் போட்டிகளில் இருந்து விலகிக் கொள்ளும் ஒரு விளையாட்டு வீரர் இரண்டு போட்டித் தொடர்களுக்கு IPL ஏலத்தில் பங்கேற்கத் தடை விதிக்கப்படுவார்.

# முக்கிய தினங்கள்

## ஜன் ஔஷதி திவாஸ் - மார்ச் 07


- இந்தத் திட்டம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துவதையும், பொது மருந்துகளின் பயன்பாட்டை ஊக்குவிப்பதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பிரதமர் பாரதிய ஜன் ஔஷதி பரியோஜனா (PMBJP) திட்டம் ஆனது 2008 ஆம் ஆண்டில் இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் கீழ் உள்ள மருந்துத் துறையால் தொடங்கப்பட்டது.
- இது மலிவு விலையில், பொதுப் பெயர் கொண்ட மாற்றுகளை வழங்குவதன் மூலம் விலையுயர்ந்த மருந்துகளின் பிரச்சினையை நிவர்த்தி செய்கிறது.
- ஜன் ஔஷதி மருந்துகளின் விலைகள் ஆனது, திறந்தச் சந்தையில் கிடைக்கும் பெரு நிறுவனங்களின் மருந்துகளின் விலைகளை விட 50% முதல் 80% வரை மிக குறைவாக உள்ளன.




## சர்வதேச மகளிர் தினம் - மார்ச் 08

- இந்தத் தினமானது, உலகெங்கிலும் உள்ள பெண்களின் சாதனைகள், நெகிழ்தன்மை மற்றும் விலைமதிப்பற்றப் பங்களிப்புகளுக்குக் கௌரவிக்கும் விதமாக அனுசரிக்கப் படுகிறது.
- 2025 ஆம் ஆண்டு பெய்ஜிங் பிரகடனம் மற்றும் நடவடிக்கைக்கானத் தளத்தின் 30வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "For ALL Women and Girls: Rights. Equality. Empowerment" என்பதாகும்.




☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆